**செய்தி வெளியீடு எண்: 756** **நாள்: 22.10.2018**

**தமிழ்நாடு அரசு**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**
**தனித்தேர்வர்களுக்கான முதனிலைத் தேர்வு, டிசம்பர் 2018**

2019ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழ் தேசிய தொழிற் பயிற்சி குழுமத்தால் (NCVT) நடத்தப்படும் அகில இந்திய தொழிற்தேர்வில் தனித் தேர்வர்களாக (Private Candidates) கலந்து கொள்ள கீழ்க்காணும் தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. விண்ணப்பிக்க குறைந்தபட்சம் **23 வயது** பூர்த்தி அடைந்தவராக இருக்க வேண்டும்.
2. விண்ணப்பிக்கும் தொழிற்பிரிவிற்கான குறைந்தபட்ச கல்வித் தகுதியானது, அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்வதற்காக நிர் ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதியே ஆகும்.
3. அரசு பதிவு பெற்ற நிறுவனத்தில் **(தொழிற்சாலை சட்டம் 1948–ன் கீழ் அல்லது தொழிற்பழகுநர் சட்டம் 1961–ன் கீழ் அல்லது SSI பதிவு பெற்ற)** குறைந்தபட்சம் **3 ஆண்டுகள்** முன்னனுபவம் பெற்றுள்ள முறையான பணியாளர்களாக இருத்தல் வேண்டும்.

மேற்கண்ட நிறுவனங்களில் தற்போது பணிபுரிந்து கொண்டிருக்கும் நபர்கள் தனித்தேர்வராக தேர்வெழுத தகுதியுடையவராவர்.விண்ணப்பதாரர் முழுநேரப் பணியாளராக பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். மாநில தொழிற் பயிற்சித் திட்டத்தின் கீழ் ( S.C.V.T) பயிற்சி பெற்று (அதே பயிற்சிக் காலம் மற்றும் கல்வித் தகுதி) சான்றிதழ் வைத்திருப்பவர்கள் தனித்தேர்வராக தேர்வெழுத அதே தொழிற்பிரிவில் விண்ணப்பிக்கலாம். SCVT பயிற்சி திட்டத்தில் பருவமுறைப்படி பயிற்சி பெற்று வரும் பயிற்சியாளர்களும் தனித்தேர்வர்களாக எழுத விண்ணப்பிக்கலாம்.

தொழிற்பழகுநர் சட்டம் 1961–ன் கீழ் அடிப்படை பயிற்சி மையத்தில் (Basic Training Centre) தொழிற்பழகுநர் பயிற்சி பெற்று, தொழிற்பழகுநர்களுக்கான தொழிற்தேர்வில் 6 முறையும் தோல்வியுற்றவர்கள் தனித் தேர்வராக தேர்வெழுத விண்ணப்பிக்கலாம். ஆனால் அவ்வாறு தனித்தேர்வு எழுதுபவர்கள் ஏற்கனவே தேசிய தொழிற் சான்றிதழ் ( N.T.C. ) பெற்றிருக்கக் கூடாது.

தகுதியுள்ள நபர்களுக்கு முதனிலைத் தேர்வு **13.12.2018** மற்றும் **14.12.2018** ஆகிய தேதிகளில், கிண்டி, அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் இத்துறையால் நடத்தப்படும். இதில் தேர்ச்சி பெறுபவர்கள் மட்டுமே ஜனவரி **2019**ல் நடைபெறவுள்ள அகில இந்திய தொழிற்தேர்வில் முதல் பருவமுறைத் தேர்வில் தனித்தேர்வராக (Private Candidate) கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். தொடர்ந்து தொழிற்பிரிவுக்கு ஏற்ப அனைத்து பருவ முறை தேர்வுகளிலும் வெற்றி பெறுபவர்களுக்கு N.C.V.T., புதுடெல்லி மூலம் தேசிய தொழிற் சான்றிதழ் (National Trade Certificate) வழங்கப்படும்

தனித்தேர்வராக விண்ணப்பிக்க விரும்புகிறவர்கள், தொழிற்தேர்விற்குரிய விண்ணப்பப் படிவம் மற்றும் முழு விபரங்கள் அடங்கிய விளக்கக் குறிப்பேடு (Prospectus) ஆகியவைகளை கீழ்க்காணும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் **24.10.2018** முதல் ரூ. 50/– (ரூபாய் ஐம்பது மட்டும்) ரொக்கமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்கள் விற்பனை செய்யப்படும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | அம்பத்தூர் | 10 | நாகபட்டினம் | 19 | தேனி |
| 2 | வடசென்னை | 11 | உளுந்தூர்பேட்டை | 20 | புதுக்கோட்டை |
| 3 | கிண்டி | 12 | கோயமுத்தூர் | 21 | பரமக்குடி |
| 4 | வேலூர் | 13 | ஈரோடு | 22 | நாகர்கோவில் |
| 5 | திருவண்ணாமலை | 14 | தாராபுரம் | 23 | திருநெல்வேலி (பேட்டை) |
| 6 | செங்கற்பட்டு | 15 | சேலம் | 24 | தூத்துக்குடி |
| 7 | திருச்சி | 16 | ஓசூர் | 25 | விருதுநகர் |
| 8 | தஞ்சாவூர் | 17 | மதுரை | | |
| 9 | கடலூர் | 18 | திண்டுக்கல் | | |

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை **16 .11.2018** க்குள் மேற்கண்ட அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இது தொடர்பாக பிற விபரங்கள் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது,

ஆணையர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**